Registereu as a newspaper

G.C.E. (A/L) 1987
Physics: VARAM
நடைபெறுகின்றது.
திங்கள், வெள்ளி;
3-4 ELECTRICITY
திங்கள், வெள்ளி;
4-5 MECHANICS
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ. 1/-

DAY CLASS
A/L PHYSICS
* MECHANICS *
ஆரம்பம் - 1-12-86
திங்கள் காலை 7-30 மணி
MON-FRI - 7-30A.M.
by
SATHTHIYASEELAN
NEW MASTER INSTITUTE
B.M.C. Lane, JAFFNA

சுடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு கார்த்திகை மீ 22 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு ஆகிர் பிறை 05 (08-12-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 10

இனப் பிரச்சினைப் பேச்சு

# அரசு மீண்டும் பின்வாங்கியது!

## பெங்களூரில் கொடுத்த உறுதிமொழியையும் மீறியது

புதுடில்லி டிச. 7

வடக்கு மாகாணத்துடன் கிழக்கில் அமையப் போகும் தமிழ் மாகாணத்தை இணைக்கலாம் என்று பெங்களூரில் வைத்துக் கொடுத்த உறுதி மொழியில் இருந்தும் இலங்கை பின் வாங்கிவிட்டது.

அப்படி இணைக்கப்படுவது சாத்தியமாகாது என்று இலங்கை அரசு தனது தூதுவர் மூலம் இந்தியாவுக்கு அறிவித்துவிட்டதாக புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன

பெங்களூரில் பிரதமர் காந்தியுடன் நடத்திய பேச்சுக்களின் போது, கிழக்கில் உருவாக்கப்படும் மட்டக்களப்புத் தமிழ் மாகாணத்தை வடக்கு மாகாணத்துடன் இணைக்க ஜனாதிபதி ஜெயவர்த்தன ஒப்புக் கொண்டார் என்றும்—

கொழும்பு விஜயத்தை மேற்கொண்ட இணை அமைச்சர் குழுவிடம் அந்த ஒப்புதலுக்கு மாறுபாடான கருத்துக்களை இலங்கை அரசு தரப்பின

(4-ம் பக்கம் பார்க்க)



புலிகளினால் பிடித்து வைக்கப்பட்டுள்ள இரு சிப்பாய்களில் ஒருவரான பண்டார தம்மைப் பார்க்க யாழ்ப்பாணம் வந்த தாயாரையும் சகோதரனையும், சகோதரியையும் பிரியும் கட்டம் (இ)

சிப்பாய்களை மீட்கும் முயற்சியில்

# பௌத்த குருமார் மூலம் நடவடிக்கை எடுப்பேன்

## வவுனியாவில் விஜே உரை

யாழ்ப்பாணம், டிச 8

புலிகளினால் சிறைப் பிடிக்கப்பட்ட சிப்பாய்களை மீட்பதற்கு நான் பௌத்த மதகுருமார் மூலம் நடவடிக்கை எடுப்பேன்

நேற்று யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு திரும்பிய விஜே குழுவினர் வவுனியாவில் மதிய போசனத்துக்காக தரித்து நின்றனர்.

அப்பொழுது வவுனியா கந்தசாமி கோவிலடியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் விஜே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

எனது விஜயத்திற்கான முதற்கட்ட வெற்றியை நான் அடைந்துள்ளேன்.

தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்த விஜயம் மூலம் அத்திவாரம்

(4-ம் பக்கம் பார்க்க)

கொழும்பில்

# 20 யாழ் வாலிபர் நேற்றுக் கைது

கொழும்பு, டிச 8

கொழும்பில் செட்டித்தெரு, ஸ்ரீ கதிரேசன் வீதிப் பகுதிகளில் கடந்த சனி அதிகாலை பொலீஸார் நடத்திய தேடுதலில் 20 தமிழ் வாலிபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கோட்டைப் பொலீஸில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர்.

வெளிநாடு செல்ல பாஸ்போர்ட் பெறுவதற்காக இவர்கள் வட பகுதியில் இருந்து கொழும்பு வந்தவர்கள் என்று தெரியவருகிறது. (அ-ஐ-எ)

இறந்தவர்போல் பாசாங்கு செய்து

# சடலங்களுடன் கிடந்து தப்பியவர்

மட்டக்களப்பு, டிசம்பர் 8

இறந்தவர்போல் பாவனைசெய்து சடலங்களோடு காணப்பட்ட ஒருவர், பொலீஸாரைக் கண்டதும் எழும்பி பாதுகாப்புக் கேட்டார்.

இதைத்தொடர்ந்து மட்டக்களப்பு — கல்முனை பஸ்ஸில் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழர் எண்ணிக்கை 11 ஆனது.

இப்படி உயிர் தப்பியவர் மா. நற்குணம் மரணவிசாரணையில் அவர் சொன்னதாவது; வெள்ளி இரவு 12 மணியளவில் கடமை முடிந்து பதினொரு ஊழியரும் கல்முனை நோக்கி பஸ்ஸில் சென்றுகொண்டிருந்தோம்.

மஞ்சந்தொடுவாய் என்னும் இடத்தில் கணேசன் என்ற பயணி பஸ்ஸில் ஏறினார். பின்னர் இடையில் ஆயுதம் தரித்த முஸ்லிம் இளைஞர்கள் 20 பேர் வரையில் பஸ்ஸை மறித்து உள்ளே ஏறினார்கள். பஸ் ஸ்டார்ட் இல்லாமல் நின்றுவிட்டது.

அந்த முஸ்லிம் இளைஞர்கள் பின்னர் பஸ்ஸைத் தள்ளி இயங்கச் செய்தார்கள்.

பின்னர் பஸ்ஸினுள் ஏறி "ஆடர் கிடைத்து விட்டது" என்று கூறிச் சுட்டார்கள்.

சூடு முதலில் சாரதி மீது விழுந்தது பின்பு

(4ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய இணை அமைச்சர் குழு 17ஆம் திகதி மீண்டும் கொழும்பு வருகிறது

புதுடில்லி, டிச 7

இலங்கை அரசு அனுப்பிய விளக்கங்கள் குறித்து ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் மீண்டும் பேச்சுக்கள் நடத்த இந்திய இணை அமைச்சர் குழு இம்மாதம் 17ஆம் திகதி கொழும்பு விஜயம் செய்ய உள்ளது.

இதனிடையில் இலங்கையின் விளக்கங்கள் குறித்து தமிழர் அமைப்புக்களின் கருத்துக்களைப் பெற இணை அமைச்சர் குழு இம் மாதம் 12ஆம் திகதி சென்னை செல்ல இருக்கின்றது.

இணைஅமைச்சர் குழுவில் திரு. நட்வர்சிங், திரு. ப. சிதம்பரம் ஆகியோர் அங்கம் வகிப்பர்.

ரஷ்யத் தலைவர் கோர்பச்சேவின் விஜயத்தினால் தாமதப் படுத்தப்பட்டிருந்த இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இந்தியாவின் மத்தியஸ்த நடவடிக்கை இவ்வாரம் தொடக்கம் மீண்டும் சுறுசுறுப்படையத் தொடங்குகிறது. (இ-எ)

# விஜே குழுவினர் கொழும்பு புறப்பட்டனர்

யாழ்ப்பாணம், டிச. 8

விஜே குழுவினர் தமது யாழ் விஜயத்தை முடித்துக்கொண்டு, நேற்றுக் காலை கொழும்பு நோக்கிப் பயணமாயினர்.

சுபாஸ் விடுதியில் இருந்து காலை 5.45 மணி அளவில் இவர்களின் வாகனங்கள் தமது நீண்ட பயணத்தை ஆரம்பித்தன. புலிகளின் வாகனம் இவர்களுக்குப்

(4-ம் பக்கம் பார்க்க)

இச்சந்தி ஒளி



நல்லது. வரைபடத்தைக்காட்டி, தமிழ்ப் பகுதியை எப்பிடிச் சிங்களப் பகுதியளாக மாற்றப்பட்டது எண்டதை விளக்கினார் எண்டால் சரிதான்...!

# அரசின் தீர்வை தமிழ் மக்கள் ஏற்றால் புலிகள் இயக்கத்தைக் கலைத்து விட்டு நான் ஒதுங்குவேன்

சென்னை, டிச 7

சிறீலங்கா அரசு இப்போது முன்வைத்துள்ள சமரசத் தீர்வை ஈழத் தமிழ் மக்கள் ஏற்பார்களேயானால் நான் விடுதலைப் புலிகள் இயக்கத்தைக் கலைத்துவிட்டு அரசியலில் இருந்து ஒதுங்கிவிடுவேன்.

இப்படித் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் அறிவித்து இருக்கிறார்.

"இனப்பிரச்சினைத் தீர்வுக்காக இன்று சொல்லப்படும் யோசனைகள் ஈழ மக்களுக்கு உகந்தவை அல்ல.

"ஈழத் தமிழ் மக்கள் இச் சமரசத் தீர்வை ஏற்பார்களேயானால் நான் விடுதலைப் புலிகள் இயக்கத்தைக் கலைத்துவிட்டு அரசியலில் இருந்து ஒதுங்கி விடுவேன்.

"விரைவில் ஈழத்தில் மக்கள் கருத்தை அறியும் வாக்கெடுப்பும் நடக்கலாம். இப்படி நான் சகாக்களிடம் கூறி வருகிறேன்." —



'ஜூனியர் விகடன்' வார இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே திரு. பிரபாகரன் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

இப் பேட்டி டிசம்பர் 3 ஆம் திகதி இதழில் பிரசுரமாகியிருக்கிறது.

திரு. பிரபாகரன் தமது பேட்டியில் மேலும் கூறியிருப்பதாவது:-

"ஈழப்பிரச்சினை கூர்மையான வடிவம் பெற்றுள்ளது

"சமரசம் என்று சொல்லி வழுக்கிக் கொண்டு போக இனி வழியில்லை.

"இந்தியாவிற்குக் கொல்லைப்புற வழியாக வந்தது நாம் செய்த பெருந்தவறு"- என்றார். (அ-ஐ-எ)

# கட்டப்பராயில் பாதயாத்திரை குழப்பப்பட்டது

யாழ்ப்பாணம், டிச. 8

பல்கலைக்கழக மாணவர்களின் பாத யாத்திரை கட்டப்பராயில் நேற்றுக் குழப்பப்பட்டது.

இது தொடர்பாக பல்கலைக் கழக மாணவர் அமைப்பு விடுத்த அறிக்கையின் சாரம் வருமாறு:-

நேற்றுக்காலை சுமார் 8.30 மணியளவில் இருபாலையில் இருந்து எமது பாதயாத்திரை பருத்தித்துறை- யாழ்ப்பாணம் வீதி வழியாக வந்து கொண்டிருந்தது.

கல்வியங்காடு கட்டப்பராய் குளத்தடியில் வந்த சிலர் பாதயாத்திரையைத் தொடர விடாமல் வழிமறித்தனர்.

நாம் எமது போராட்டம் பற்றி அவர்களுக்குத் தெளிவு படுத்திக் கொண்டிருந்த வேளை

(4-ம் பக்கம் பார்க்க)

களுவாஞ்சிக்குடி சம்பவம்:

# மற்றும் ஒருவர் மரணமானார்

மட்டக்களப்பு, டிச. 8

கடந்த வெள்ளி இரவு களுவாஞ்சிக்குடி அதிரடிப்படை முகாம் முன்னால் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்தவர்களில் ஒருவரான திவாகர் என்ற இளைஞர் சத்திரசிகிச்சையின் பின்னர் மரணமானார்.

இதைத் தொடர்ந்து இச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5ஆக உயர்ந்தது.

காயமடைந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள ஜெகதீஸ்வரன் என்பவர் யாழ் பல்கலைக் கழக மாணவன் என்று அறிவிக்கப்படுகின்றது.

## பரீட்சை சுமுகமாக நடைபெறுகிறது

வடமராட்சிப் பகுதியில் ஜீ. சி. ஈ. சாதாரணப் பரீட்சை எவ்வித அசம்பாவிதமும் இன்றி நடைபெற்று வருகிறது.

## மகாவலி பகுதியில் பன்றி வளர்க்கத் தடை

கொழும்பு, டிச 8

மூளைக்காய்ச்சல் நோய் பரவுவதற்கு காரணமான பன்றிவளர்ப்பை மகாவலிப் பிரதேசத்தில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை தடை செய்து உள்ளது. (இ-எ)

## ஊரடங்கு மீண்டும் அமுல்

மீண்டும் மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று மாலை 6 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்குச்சட்டம் இன்று காலை 5 மணியுடன் நீக்கப்படும்.

27 மணித்தியால ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட சமயம் மட்டக்களப்பு மாவட்டத்தில் அசம்பாவித சம்பவங்கள் இடம் பெறவில்லை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ-21)

# கிழக்கின் வரைபடத்துடன் அமெரிக்கா செல்லும் லலித்!

## குற்றச்சாட்டுகளை எதிர்த்து அங்கு வாதாடுவாராம்

—கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர்—

கொழும்பு, டிச. 8

கிழக்கு மாகாணத்தின் இனவிகிதாசாரம் பற்றிய வரைபடத்துடன் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி நேற்று அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார்.

அதற்கு முன்னர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துச் செய்தியாளர்கள் மத்தியில் திரு. அத்துலத் முதலி உரையாடினார்.

"பயங்கரவாதம் பற்றியே நான் பேச அமெரிக்கா செல்கின்றேன்; துப்பாக்கிகள் பற்றி பேசுவதற்கு நான் செல்லவில்லை.

"அமெரிக்க பத்திரிகையாளர்கள், மனித உரிமை இயக்கப் பிரதிநிதிகள் முதலியவர்களுடன் நேருக்கு நேர் நான் வாதிடப்போகிறேன்.

"இலங்கை அரசு உண்மையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பாடுபடுகின்றது என்பதை

(4 ஆம் பக்கம் பார்க்க)

**சுபநேரம்**

08—12—1986

திங்கட்கிழமை

சுபநேரம்:

12.17 முதல் 1.47 வரை

ராகுகாலம்:

7.47 முதல் 9.17 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

திருவெம்பாவைப் பூஜாரம்பம்

# ஆறேழு வாகனங்களில் நூறுபேர் வரை வந்தனர்

## ஊர்காவல் படையினர் மரணங்கள் பற்றி சாட்சியம்

மட்டக்களப்பு, டிச. 8

ஆறேழு வாகனங்களில் ஆயுதங்களுடன் வந்திறங்கிய சுமார் 100பேர் ஊர்காவல் படை அலுவலகத்தை நோக்கிச் சரமாரியாக சுட்டு, குண்டுகளை வீசினர்.

இக்கோஷ்டியில் சில பெண்களும் இருந்தனர்.

காத்தான்குடி ஊர்காவல் படையினர் மரணங்கள் சம்பந்தமான மரணவிசாரணையில் சாட்சியம் அளிக்கையில் சாஹுல்ஹமீது ஜிப்ரால் என்பவர் மேற்கண்டவாறு கூறினார்.

சாட்சி மேலும் சொன்னதாவது;

நானும் ஊர்காவல் படையைச் சேர்ந்தவன். சரமாரியாக இனந்தெரியாதவர்கள் சுட்டனர். கைக்குண்டுகளும் வீசப்பட்டன.

நான் பயத்தினால் அலு

(4-ம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவுப்பகுதியில் தொடர்ந்து மழை பெரும்போகப் பயிர் பாதிப்பு

மண்டைதீவு, டிச 8

தீவுப் பகுதியில் தொடர்ச்சியாக மழை பெய்து கொண்டிருக்கின்றது.

இதனால் இம்முறை பெரும்போக நெற்செய்கைக்குப் பெரிதும் பாதிப்பு ஏற்படலாம் என விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றார்கள்.

வயல் நிலங்கள் ஒரே வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன.

சிறுபோக பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளும் வெள்ளத்தால் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றார்கள்.

மண்டைதீவு பகுதியில் மிளகாய் நாற்றுகள் புகையிலை நாற்றுகளுக்கு அதிக கிராக்கி இம்முறை இல்லையெனத் தெரிகின்றது.

இம்முறை ஏராளமான விவசாயிகள் நாற்று மேடைகள் போட்டிருப்பதே இதற்குக் காரணம் ஆகும்.

முன்பு நூறு கன்றுகள் 10 ரூபாவாக விற்கப்பட்டன. இம்முறை 5 ரூபாவாக விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இங்கு உற்பத்தி செய்யும் நாற்றுக் கன்றுகளை வாங்குவதற்கு யாழ்குடா நாட்டின் பல பாகங்களிலிருந்தும் விவசாயிகள் வருவது உண்டு.

இக்காலங்களில் இங்குள்ள விவசாயி நாற்று கன்றுகள் விற்று சுமார் 50 ஆயிரம் ரூபாவரை சம்பாதிப்பார்கள்.

இம்முறை இவர்களுக்கு அதிக அளவு சம்பாத்தியம் இருக்க மாட்டாது என்று கூறப்படுகிறது. (இ-88)

## தீவிரவாதிகளே இராணுவத் தீர்வை வருந்தி அழைக்கிறார்கள்

### வருடாந்த மாநாட்டில் ஜனாதிபதி

கொழும்பு, டிச. 8

தீவிரவாதிகள் தான் இராணுவத் தீர்வை வருந்தி அழைக்கிறார்கள். விரைவில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன, சனிக்கிழமை நடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் 32 ஆவது வருடாந்த மாநாட்டில் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் நடந்த இம் மாநாட்டில் சுமார் பத்தாயிரம் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன மேலும் சொன்னதாவது:-

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இன்று பெரும் தடையாக இருப்பது இணைப்புத்தான். தீவிரவாதிகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்துத் தரும்படி கோருகின்றார்கள்.

வடக்கு - கிழக்கு இணைப்பை இலங்கை அரசு நிராகரித்து விட்டது.

அது மட்டுமல்ல கிழக்கில் உள்ள முஸ்லிம்களும் தமிழர்களும் சிங்கள மக்களும் இணைப்பை வன்மையாக எதிர்க்கின்றனர்.

எமது யோசனைகள் சம்பந்தமான விளக்கங்களை இந்தியாவுக்கு அனுப்பியுள்ளோம். தீவிரவாதிகள் எமது விளக்கங்களுக்கு என்ன சொல்லப் போகிறார்கள் என்பதைப் பொறுத்துத் தான் இனப்பிரச்சினைத் தீர்வின் முன்னேற்றம் தங்கியுள்ளது.

இப்படி ஜனாதிபதி தெரிவித்தார். (இ-எ)




## தமிழ்ப் போராளிகளிடம் உறுதிமொழி கேட்கிறார் மட்டக்களப்பு எம்.பி.

மட்டக்களப்பு, டிச. 8

முஸ்லிம் ஊர்காவல் படையினரிடம் இருந்து ஆயுதங்கள் பெறப்படும்.

ஆனால் ஒரு நிபந்தனை முஸ்லிம் மக்களை தாக்கமாட்டோம் என்று போராளிகள் உறுதிமொழி தரவேண்டும்.

இப்படி மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. ஜனாப் றிஸ்வி சின்ன லெப்பை, உதயன் செய்தியாளரிடம் வெளியிட்டார்.

காத்தான்குடிச் சம்பவங்கள் குறித்து ஜனாப் சின்னலெப்பை கவலை வெளியிட்டார்.

இரு இனங்களுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தும் முயற்சியில் தான் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகவும் ஜனாப் றிஸ்வி சின்னலெப்பை தெரிவித்தார். (அ-எ-21)

## மண்வளம் காத்து மண் அரிப்பை தடுக்க மரங்களை நடுவோம்

### விவசாய விரிவாக்க அலுவலர் உரை

பண்டத்தரிப்பு, டிச 8

மண்வளம்காத்து, மண் அரிப்பைத் தடுத்து, பருவமழை பெற்று விவசாயத்தில் நல்ல விளைவு பெற வளவுகள், தரிசு நிலங்களில் பயன்தரும் மரக்கள் நடப்பட வேண்டும். மில்க்வைற் அதிபர் சிவதர்ம வள்ளல் க. கனகராசாவின் இலவச மரக்கன்று விநியோகத்தை முழுமையாகப் பயன்படுத்தி பயனடையுங்கள்.

விவசாய விரிவாக்க அலுவலர் திரு. வை. பாலகிருஷ்ணன் இவ்வாறு கூறினார்.

பண்டத்தரிப்பு பத்திமாதா கோவிலில் நடந்த மரம் நடும் விழாவிலும் விவசாயிகள் கருத்தரங்கிலும் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

பண்டத்தரிப்பு பங்குத்தந்தை ஜெயக்குமார் அடிகள் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி. இராமநாதன் உரையாற்றுகையில் இன்று நாம் விறகுக்கும் தளபாடஞ் செய்யவும் பயன்படுத்தும் மரங்கள் நாம் நட்டவை அல்ல.

எமது பெற்றோர், முன்னோர் எமக்காக நட்டவையே.

நம் முன்னோர் செய்தவற்றின் பயன்களை நாம் அனுபவிக்கிறோம். அது போல நாமும் நம் சந்ததிக்கு என்ன செய்தோம், என்ன செய்கின்றோம் என்பதை ஒவ்வொருவரும் தம்மைத் தாமே கேட்டுக்கொள்ள வேண்டும் என்றார்.

பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் சபா நாராயணன், பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. அ. யேசுதாசன், சிவதர்மவள்ளல் க. கனகராசா உட்பட பலர் உரையாற்றினர்.

பயிர் வகையும் பீடைகளும் எனும் தலைப்பில் சிரேஷ்ட போதனாசிரியர் திரு. க. குமாரவேலு உரையாற்றினார். (இ - 120)

## சமூகமளிக்காத சாட்சிக்கு அபராதம்

வட்டுக்கோட்டை, டிச. 8

வழக்கு விசாரணையின் போது அறிவித்தலின்றி வழக்குக்குச் சமூகமளிக்காத சாட்சிக்காரர் ஒருவருக்கு ரூபா 50 அபராதம் விதிக்கப்பட்டது.

வட்டுக்கோட்டை கிழக்கு கிராம நீதிமன்றத்திலேயே இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் நடைபெற்ற வட்டு கிழக்கு கிராம நீதிமன்றத்தில் கொடுக்கல் வாங்கல் பணப்பிரச்சினை சம்பந்தமான வழக்கு ஒன்று தொடர்ந்து நடைபெற்று வருகின்றது

இந்த வழக்குக்குச் சாட்சியாக சமூகமளிக்கும்படி அழைப்பாணை இந்த நீதிமன்றத்தால் விடுக்கப்பட்டிருந்தது.

இருந்தும் உரிய தவணையின்போது எதுவித அறிவித்தலுமின்றி சமூகமளிக்காத சாட்சிக்காரருக்கே ரூபா ஐம்பது அபராதம் விதிக்கப்பட்டது.

சாட்சிக்காரர் தவறை ஒப்புக்கொண்டு அபராதப் பணத்தை உடன் செலுத்தினார். (இ-161)

## சகல அலுவல்களும் மட்டக்களப்பில் ஸ்தம்பிதம்

### பரீட்சை நடக்கவில்லை

மட்டக்களப்பு, டிச. 8

வெள்ளி, சனிக்கிழமைகளில் நடைபெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து, மட்டக்களப்பு மாவட்டத்தில் சகல அலுவல்களும் சனிக்கிழமை ஸ்தம்பித்தன.

போக்குவரத்துச் சபையின் 12 ஊழியர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக இ. போ. ச. ஊழியர்கள் வேலைக்குச்செல்லவில்லை.

இதன் காரணமாக பஸ்கள் ஓடவில்லை. கடைகள் மூடப்பட்டன. போக்குவரத்து துண்டிக்கப்பட்டது.

காத்தான்குடி, ஆரையம்பதி பகுதிகளில் க. பொ. த. பரீட்சை 8 நிலையங்களில் நடைபெறவில்லை.

வினாப் பொதிகளைக் கொண்டு செல்ல பாதுகாப்புப் படையிடம் பரீட்சை அதிகாரிகள் அனுமதி கோரினர். ஆனால் அனுமதி மறுக்கப்பட்டது.

போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டதால் 90 சதவீதமான மாணவர்கள் பரீட்சைக்குச் செல்லவில்லை

காத்தான்குடி எல்லைக் கிராமங்களானமஞ்சந்தொடுவாய், நாவற்குடா, ஆரையம்பதி ஆகிய பகுதிகளில் இருந்து தமிழ் மக்கள் அச்சம் காரணமாக இடம் பெயர்ந்தனர். (அ-எ-21)

## சாவகச்சேரியில் நடந்த ஆகுதி நூல் அறிமுகவிழா

சாவகச்சேரி, டிச. 8

பிரபல எழுத்தாளர் சோமகாந்தன் எழுதிய ஆகுதி நூல் அறிமுகவிழா சாவகச்சேரி நகராட்சி மன்ற மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இலக்கிய நண்பர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சி நகராட்சி மன்ற செயலாளர் திரு. த. நவரத்தினராசா தலைமையில் நடைபெற்றது

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் திரு. அ. சண்முகதாஸ் நூலை அறிமுகம் செய்து வைத்தார்.

திரு. நீர்வை பொன்னையன், யாழ் உள்ளூராட்சித் திணைக்களத்தைச் சேர்ந்த திரு மு. குமாரதாசன், சமூகசேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். தவநாயகம், மீசாலை வீரசிங்கம் வித்தியாலய அதிபர் திரு. தா இராமலிங்கம் ஆகியோர் ஆய்வுரைகள் வழங்கினர்.

நூலாசிரியர் திரு. நா. சோமகாந்தன் பதிலுரை நிகழ்த்தினார் (இ- 31)

## ராஜீவின் கவனம் இலங்கை பிரச்சினைமீது

### 10 ஆம் திகதிக்குப் பின்பே

புதுடில்லி, டிச. 7

இம்மாதம் பத்தாம் திகதிக்குப் பின்னர்தான் இலங்கை இனப்பிரச்சினையில் பிரதமர் ராஜீவ் காந்தி தீவிர கவனஞ் செலுத்துவார் என்று புதுடில்லி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

பத்தாம் திகதியுடன் இந்திய நாடாளுமன்றத்தின் மழைக் காலக் கூட்டத்தொடர் முடிவடைகின்றது.

[illegible] இலங்கை இனப்பிரச்சினையில் பிரதமர் காந்தி தீவிரம் காட்டுவார் என்று அவ்வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

இதனிடையில் டாக்காவுக்கு விஜயம் செய்த இந்திய வெளியுறவுச் செயலாளர் ஏ. பி. வெங்கடேஸ்வரன், உதவிச் செயலாளர் குல்தீப் காதர் கடந்த வெள்ளி புதுடில்லி திரும்பினர்.

தமிழரின் தாயகக் கோரிக்கை குறித்து இலங்கை மீது இந்தியா நிர்ப்பந்தம் செலுத்தக்கூடிய சாதகமான சூழ்நிலை [illegible] ருப்பதாகவும் புதுடில்லி அரசு வட்டாரச் செய்திகள் தெரிவித்தன. (அ-ஐ-எ)

## நிவாரணம் வழங்கக் கோரிக்கை

அம்பாறை, டிச 8

வீரமுனைக் கிராமத்தில் ஆயுதப்படையினரின் தேடுதலின்போது தீக்கிரையான 4 வீடுகளில் வசித்துவந்த 6 தமிழ்க் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும்படி புனர்வாழ்வு அமைச்சிடம் சம்மாந்துறை உதவி அரச அதிபர் திரு. ஏ. விக்னராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-எ-14)

## நன்கொடை

வல்வெட்டித்துறை, டிச. 8

இமையாணன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு புதிய மாடிக் கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்காக ஐந்தரைப் பரப்புக்காணியை இமையாணனைச் சேர்ந்த பிரமுகரான திரு. சி. தருமலிங்கம் வழங்கினார். (இ-160)

இதோ! வெளிவந்துவிட்டது!
ஹப்பி அளிக்கும்
ஜோ. எகட்டனின் தயாரிப்பில்
16 முத்தான
கிறிஸ்மஸ் பாடல்கள் அடங்கிய கஸட்
(PRE RECORDED CASSTTESS)
உங்கள் முத்துக் குவியல்களைத் தெரிவு செய்திட முந்துங்கள்!
விலை ரூபா 35/- மட்டுமே!
நாடுங்கள்:
சண்முகம் ட்ரேட்ஸ்
பிரதான வீதி,
(சின்னக்கடை சந்தி)
யாழ்ப்பாணம்.
Zenith Ads.

இதோ! வெளிவந்துவிட்டது!
ஹப்பி அளிக்கும்
ஜோ எகட்டனின் தயாரிப்பில்
16 முத்தான
கிறிஸ்மஸ் பாடல்கள் அடங்கிய கஸட்
(PRE RECORDED CASSTTESS)
உங்கள் முத்துக் குவியல்களைத் தெரிவு செய்திட முந்துங்கள்
விலை 35/- ரூபா மட்டுமே!
நாடுங்கள்:
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங்
19/3, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
Zenith Ads.

## பனை அபிவிருத்திச் சபை

பனம் தோப்புக்களையும் அத்தகைய தோப்புக்களின் சொந்தக்காரர்களையும் பதிவு செய்வது சம்பந்தமான

### அறிவித்தல்

1975-ம் ஆண்டு 24-ம் இலக்க தெங்கு அபிவிருத்தி (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1971-ம் ஆண்டின் 46-ம் இலக்க தெங்கு அபிவிருத்திச் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள 2-ம் அட்டவணையின் பிரகாரம் பனை அபிவிருத்திச் சபை பனந்தோப்புக்களின் சொந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்குத் தீர்மானித்துள்ளது.

**நோக்கங்கள்:**

1. பனைமரத்தின் வளர்ச்சி, பயிரிடுகை பற்றி ஆய்வுகள் நிகழ்த்தல், ஊக்கமூட்டல், பனந்தோட்டப் பண்ணைகளில் பிறபயிர்களை விளைவித்தலும், கால்நடை பண்ணைகளை நடத்தலும், நோய்களையும், அழிவு செய்யும் உயிரினங்களையும் தடுத்து ஒழித்தல்.
2. ஆய்வு நிறுவனங்களையும், செய்முறை நிலையங்களையும், நாற்றுப் பண்ணைகளையும் நிறுவுதல், பராமரித்தல்.
3. பனம் விளைவுப் பொருட்களை பதனிடுதல், பயன்படுத்தல் தொடர்பான விஞ்ஞான ஆய்வினை நிகழ்த்தல், ஊக்கமூட்டல்.
4. பனம் விளைபொருட்களைப் பதனிடுவதற்கான முன்மாதிரி இயந்திரங்களை நிறுவுதல், பராமரித்தல்.
5. பனம் தொழிற்றுறைக்கு உதவுவதற்கென ஆலோசக விசாலிப்பு ஊழியர்களைப் பயிற்றுவித்தல்.
6. பனம் தொழிற்றுறைக்கு தொழில்நுட்ப இயல்புடைய சகல விடயங்களிலும் வழிகாட்டல், ஆலோசனை வழங்கல்.
7. பனந்தோட்டப் பண்ணைகளிலுள்ள நிலங்களை உற்பத்திப் பெருக்கத்திற்கமைய விரிவுபடுத்த உதவுதல்.
8. பனை பயிரிடுதல், பனை பயிரிடுவதற்கு உதவுதல், ஊக்குவித்தல் ஒழுங்குமுறை வகுத்தல்.
9. பனையிலிருந்து பெறப்படும் பொருட்களிலிருந்து உற்பத்திகளை மேற்கொண்டு பனை சொந்தக்காரர்களுக்கும் ஏனையோருக்கும் கூடிய வருமானத்தைப் பெறக்கூடிய வகையில் ஆக்கமும் ஊக்கமும் அளித்தல்.

**பதிவு செய்தல்:**

1. 25 பனைகளுக்கு மேல் வைத்திருக்கும் பனைச் சொந்தக்காரர்கள் தம்மைப் பதிவு செய்து கொள்ளலாம்.
2. பதிவு செய்வதற்கான விண்ணப்பப் பத்திரங்கள் யாவும் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் ஊடாக அவ்வப் பகுதிக்குப் பொறுப்பாக இருக்கும் விசேட சேவை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
3. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் அதற்குரிய உறுப்புரிமைப் பணத்துடன் அவ்வவ் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விசேட சேவை உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கலாம்.
4. பூர்த்தி செய்யப்பட்ட பட்டியல்களையும் உரிய உறுப்புரிமைப் பணத்தையும் விசேட சேவை உத்தியோகத்தர் எமக்கு அனுப்பி வைப்பார்.
5. உறுப்புரிமைப் பணத்தை உரிய அங்கத்தவரிடமிருந்து வசூலிப்பதற்குரிய பற்றுச்சீட்டுப் புத்தகம் விசேடசேவை உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பு: பனை அபிவிருத்திச் சபையில் தம்மைப் பதிவுசெய்யும் பனைச்சொந்தக்காரரே சபையால் வழங்கப்படும் உதவிகளைப் பெறத் தகுதியுடையவர்களாகக் கருதப்படுவர்.

மேலதிக விபரங்களை பனை அபிவிருத்திச் சபையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.
தேசிய வீடமைப்புச் செயலகம்,
கண்டிவீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

வீரர்கள் தான் நாட்டிற்குத் தேவை. வீரராய் கற்பாறை போல் உறுதியாய் நில்லுங்கள். வாய்மை எப்பொழுதும் வெற்றி பெறும்.

— சுவாமி விவேகானந்தர்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - இடைவிடாமை
இல.15 3ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 08-12-1986 த.பெ இல.23

## அடிக்கடி ஏன் இந்த மோதல்கள்?

மட்டக்களப்பில் மீண்டும் ஒருமுறை, தமிழ் முஸ்லிம் மக்களிடையே மோதல் ஏற்பட்டிருக்கிறது.

பெரும்பான்மையினர் ஆளும் ஆட்சி முறையின் கீழ், தமது உரிமைகளை இழந்து சுதந்திரம் இன்றி வாழும் இரு சிறுபான்மையினர்கள் தமிழரும் முஸ்லிம்களும். அத்தகைய இரு சாராரும் தமக்கிடையே மோதிக்கொண்டு சாவது மிகவும் வேதனை தருவதாகும். இரு பகுதியினரும் அடிக்கடி அடிபடுவது அர்த்தமற்றது. அது, வீணாகத் தம்மைத் தாமே அழித்துக் கொள்வதாகும்.

இரு சமூகங்களிலும் மறைந்தும், மறையாமலும் சில தீய சக்திகள் இருக்கவே செய்கின்றன. அவை தாமாகவும், அநேகமாக வெளியாரின் தூண்டுதலாலும் குழப்பத்தை உருவாக்கி தமிழ் – முஸ்லிம் மக்களை பிரித்து வைக்க அடிக்கடி முயற்சி செய்கின்றன.

அண்மைக்காலமாக நடக்கும் தமிழ் - முஸ்லிம் குழப்பங்களில் பெரும் எண்ணிக்கையானோர் கொல்லப்படுகின்றனர். இரு பக்கங்களிலும் அதிகமான உயிரிழப்புகளை உண்டாக்கி அவர்களை நிரந்தரமான பகைவர்களாக — எதிரிகளாக மாற்றி விடுவதே வெளியாரினதும், அவர்களின் கையாட்களாக உள்ள உள்ளூர் தீயசக்திகளினதும் குறிக்கோளாகும்.

இன்னொன்றையும் அவதானிக்க வேண்டும். இனப்பிரச்சினைக்கான தீர்வில் முஸ்லிம்களும் தமிழர்களும் ஒன்று சேர்ந்து நிற்கும் 'அசுகை' தென்பட்டதுமே, உடன் மோதல்கள் தூண்டி விடப்படுகின்றன. 1983 ஆம் ஆண்டின் பின்னர் இதனை ஒரு விசேட தந்திரமாகவும், யுக்தியாகவும் வெளியார் சக்திகள் கையாண்டு வருகின்றன. இந்தச் சதியில் தமிழர்களோ முஸ்லிம்களோ விழுந்துவிடக் கூடாது.

இப்போதைய சூழ்நிலையில் இனப்பிரச்சினைத்தீர்வு கிழக்கு மாகாணத்தையே முழுக்க முழுக்கச் சுற்றிச் சுழல்கிறது. தமிழ் மக்களினது தாயகத்தை மட்டுமன்றி முஸ்லிம்களின் பூர்வ பூமிகளையும் பறித்தெடுத்துத்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாக அரசாங்கம் அடம்பிடித்து வருகிறது.

ஆனால் முஸ்லிம் மக்களுக்கு ஏதோ நன்மை செய்யப் போவதாக அரசு வேஷம் போட்டு நாடகமும் ஆடுகிறது. அந்த நாடகத்தின் மூலம் முஸ்லிம் - தமிழ் உறவை குலைத்துவிடவும் அது முயற்சிக்கிறது. அந்நாடகத்தின் ஓர் அம்சமாகவே ஊர்காவல் படை என்று கூறித் தனது கையாட்களுக்கு — முஸ்லிம் இளைஞர்களுக்கு — அரசு ஆயுதங்களை வழங்கி இருக்கிறது. பிரஸ்தாப ஆயுதங்கள் மூலம், அதாவது ஊர்காவல்படை முஸ்லிம்கள் மூலம் அடிக்கடி— அதுவும் குறிப்பாக தனக்குத் தேவையான நேரங்களில் தமிழ் — முஸ்லிம் கலவரங்களை உண்டாக்குவதே அரசின் — சிங்களப் பேரினவாதத்தின் — திட்டமாகும்.

கிழக்கில் அரசின் சூழ்ச்சிக்குப் பாதகமான சூழ்நிலை தோன்றும் போதெல்லாம் முஸ்லிம் ஊர்காவலர்களை ஏவிக் குழப்பத்தை உண்டாக்கும் ஒரு சூத்திரத்தை (Formula) அது வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகிறது!

இதன் ஆழத்தை முஸ்லிம் – தமிழ் உறவிலும் நலனிலும் அக்கறையுள்ள தமிழர்களும் முஸ்லிம்களும் புரிந்து கொள்வது அவசியம். அதற்கேற்றவாறு சமாதானத்தை ஏற்படுத்த வல்ல சக்திவாய்ந்த மாற்றுத் திட்டங்களை, சூத்திரங்களை உருவாக்குவதும் மிக அவசியம்.

இந்த வகையில் மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. ஜனாப் றிஸ்வி சின்னலெப்பை முன்வைத்துள்ள யோசனை இரு பகுதியினராலும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

முஸ்லிம் மக்களைத் தாக்குவதில்லை என்று தமிழ்ப் போராளிகள் உறுதி தந்தால் முஸ்லிம் ஊர்காவல் படையினரிடம் இருந்து ஆயுதங்களை வாபஸ் பெறுவிப்பதாக அவர் அறிவித்திருக்கிறார்.

எம். பி. என்ற வகையில் அவருக்கு அதற்கான தகுந்த அதிகாரமும், செல்வாக்கும் இருந்து தமது யோசனையை அமுல் செய்யும் பொறுப்பை அவர் சரிவர ஏற்பாரானால் தமிழ்ப் போராளிகள் அவரது நிபந்தனையை ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

ஆனால் ஒன்று. அரச படையினரே இனந்தெரியாத நபர்களாக வேடம் பூண்டு முஸ்லிம் மக்கள் மீது ஆயுதப் பிரயோகம் செய்துவிட்டு, தமிழ்ப் போராளிகள் தலையில் போட்டு குழப்பத்தை ஏற்படுத்தாமல் இருக்கவும் ஜனாப் சின்னலெப்பை உத்தரவாதம் கொடுக்க வேண்டும்.

எப்படியும் தமிழ் - முஸ்லிம் உறவு பேணப்படுவதே இன்றைய மிக அவசர, அவசிய தேவை.

அடாவடித்தனமும், பகைமையும் வளர விடாது அவற்றை முளையில் கிள்ளி எறிந்து சமாதானத்தையும் சகவாழ்வையும் தோற்றுவிக்க இரு பக்கங்களில் உள்ள பெரியவர்கள், பிரமுகர்கள், சமூகத் தொண்டர்கள் முன்நின்று உழைக்க வேண்டும். சமாதானத்திற்கான முயற்சி கூட்டு முயற்சியாக, கூட்டு உழைப்பாக இருப்பதும் பிரதானமாகும்.

# அடுத்த ஜனாதிபதி பதவி வெங்கட்ராமனுக்கு?

புதுடில்லி, டிச. 7

இந்தியாவின் அடுத்த ஜனாதிபதி பதவிக்கு தமிழரான திரு. ஆர். வெங்கட்ராமனையும் உப ஜனாதிபதி பதவிக்கு தற்போதைய மகராஷ்டிர முதலமைச்சர் திரு. எஸ். பி சவானையும் நியமிக்க இந்திரா காங்கிரஸ் மேலிடம் முடிவு செய்துள்ளது.

இப்படி புதுடில்லிச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த வாரம் 76 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய திரு. வெங்கட்ராமன் தற்சமயம் உப ஜனாதிபதியாக இருக்கின்றார்.

பிரதமருக்கும் ஜனாதிபதி ஜெயில் சிங்குக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து சரத் பவர் தலைமையிலான காங்கிரஸ் (எஸ்) கட்சி இந்திரா காங்கிரஸுடன் இணைந்ததைத் தொடர்ந்தும் தேசிய அளவிலான இந்த மாற்றங்களைச் செய்ய காங்கிரஸ் மேலிடம் தீர்மானித்துள்ளது.

இப்படி இந்தியாவில் இருந்து வெளிவரும் ''வீக்கென்ட் ரிவியூ'' என்ற ஆங்கில வார சஞ்சிகை தெரிவித்துள்ளது.

1987 நடுப்பகுதியில் ஜனாதிபதி, உப ஜனாதிபதித் தெரிவுகள் இடம்பெற உள்ளன.

காங்கிரஸ் (ஐ) உடன் இணையும் திரு. சரத்பவருக்கு இந்திரா காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி முதலில் வழங்கப்படும் என்றும் பின்னர் மகராஷ்டிர முதல் அமைச்சராக நியமிக்கப்படுவார் என்றும் அச்சஞ்சிகை தெரிவித்துள்ளது.

ஆரம்பத்தில் ஜனாதிபதி பதவியை அமைச்சர் நரசிம்மராவுக்கு பிரதமர் காந்தி வழங்க முன் வந்தார் என்றும் அதை திரு. நரசிம்மராவ் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார் என்றும் அச்சஞ்சிகைமேலும் தெரிவித்துள்ளது. (இ – எ)

### வெளி உலகில்

## தென் ஆபிரிக்க ஆதரவு கிளர்ச்சிக்காரருடன் பேச மொஸாம்பிக் ஜனாதிபதி மறுப்பு

மபுட்டோ, டிச. 7

தென் ஆபிரிக்க அரசு ஆதரவுபெற்ற கிளர்ச்சிக்காரர்களுடன் நான் பேச்சுவார்த்தைகளை நடத்தமாட்டேன்.

இப்படி மொஸாம்பிக் ஜனாதிபதி ஜோக்கிம் சிசானோ அறிவித்து விட்டார்.

ஜனாதிபதி பதவியை ஏற்ற பின்னர் கலந்து கொண்ட முதலாவது வெளிநாட்டு, உள்நாட்டு செய்தியாளர் கூட்டத்தில் மேற்கண்ட தகவலை திரு சிசானோ வெளியிட்டார்.

பஸ்களை எரிப்பது, மக்களைக் கொல்வது ஆகியவற்றைச் செய்து கொண்டு, மக்களுக்கு எதிரானவர்கள் என்று எம்மைக் குற்றஞ்சாட்டுபவர்களுடன் நாம்பேச்சுவார்த்தைகளை நடத்த மாட்டோம்—

ஜனாதிபதி இப்படி வலியுறுத்தினார். (இ-எ)

## கோர்பச்சேவ் விஜயம் ஒத்திவைப்பு

டோக்கியோ, டிச.7

சோவியத் தலைவர் கோர்பச்சேவ்வின் ஜப்பானிய விஜயம் ஒத்திப் போடப்பட்டது.

ஜனவரியில் ஜப்பானுக்கு விஜயம் செய்ய சோவியத் தலைவர் முன்னர் திட்டமிட்டிருந்தார். (இ–எ)

## தென் ஆபிரிக்காவுக்கு தடை

ஐ. நா, டிச. 7

தென் ஆபிரிக்காவை அன்டார்டிகா உடன்படிக்கை நாடுகளின் கூட்டங்களில் கலந்து கொள்ள அனுமதிக்கக் கூடாது.

ஐ நா. பொதுச்சபை, உடன்படிக்கை நாடுகளுக்கு விடுத்த வேண்டுகோளில் இப்படிக் கேட்டுள்ளது. (இ – எ)

## கிரனடாவில் 14 பேருக்கு மரண தண்டனை

கிரனடா, டிச. 7

கிரனடாவின் முன்னாள் பிரதமரைக் கொலை செய்த வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட முன்னாள் உதவிப் பிரதமர் உட்பட 14 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

பிரதமராக இருந்த மொரிஸ் பிஷப்பையும் அவரின் 10 அமைச்சர்களையும் 1983 இல் கொலை செய்ததாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப் பட்டிருந்தது. (இ–எ)

## சீக்கிய தீவிரவாதிகள் குறித்து பிரிட்டன் இந்தியாவுடன் பேசும்

லண்டன், டிச.7

பிரிட்டனில் உள்ள சீக்கிய தீவிரவாதிகள் குறித்து பிரிட்டன் இந்தியாவுடன் பேச்சுக்கள் நடத்தவுள்ளது.

இதற்காக பிரிட்டிஷ் வெளிவிவகார துணை அமைச்சர் ரிமோதி ஹன்ரன் அடுத்த புதன் கிழமை புதுடில்லி செல்ல இருக்கிறார்

சீக்கிய தீவிரவாதிகளை நாடு கடத்தும் உடன்பாடு ஒன்றில் கைச்சாத்திடுவது பற்றியும் இந்தியாவுடன் அச்சமயம் பிரிட்டிஷ் அமைச்சர் பேச்சுக்களை மேற்கொள்வார். (இ-எ)

## வெள்ளை மாளிகை பேச்சாளர் ராஜினாமா!

வாஷிங்டன், டிசம்பர் 7

அமெரிக்க வெள்ளை மாளிகைப் பேச்சாளர் லீயரி ஸ்பீக்ஸ் ராஜினாமாச் செய்து விட்டார்.

முதலீட்டுக் கம்பெனி ஒன்றின் உபதலைவர் பதவியை ஏற்குமுகமாகவே திரு. ஸ்பீக்ஸ் ராஜினாமாச் செய்தார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் ஆயுத விவகாரம் வெளி வந்ததைத் தொடர்ந்து திரு ஸ்பீக்ஸின் பதவி விலகல் பற்றி தகவல்கள் அரசு வட்டாரங்களில் அடிபடத் தொடங்கின. (இ-எ)

## அணுசக்தி உலையை மூட கோரிக்கை

டப்ளின், டிச. 7

பிரிட்டனில் உள்ள ஷெல்பீல்ட் அணுசக்தி உலையை மூடிவிடும்படி ஐரிஷ் நாடாளுமன்றம் பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

இந்த உலையில் இருந்து வெளிவரும் கழிவுகள் ஐரிஷ் கடலில் கலப்பதால் சூழல் அசுத்தமடைகின்றது என்று இக்கோரிக்கைக்குக் காரணம் காட்டப்பட்டுள்ளது

இரண்டு நாள் விவாதத்தின் பின்னர் இப்பிரேரணை வாக்கெடுப்புக்கு விடாமலேயே நிறைவேற்றப்பட்டது. (இ - எ)

# கோரிக்கை நிறைவேறும் வரை சிப்பாய்கள் எம் பாதுகாப்பில்

## அவர்களைக் கொல்ல மாட்டோம் என்கிறார் கிட்டு

யாழ்ப்பாணம் டிச. 8

நாம் எந்த ஒரு காலகட்டத்திலும் உங்களது பிள்ளைகளைக் கொலை செய்ய மாட்டோம். நிச்சயம் ஒரு நாள் விடுதலை செய்வோம். இப்பொழுது அவர்கள் எங்களுடைய உறவினர்கள். எங்கள் கோரிக்கைகள் நிறைவேறும்வரை அவர்கள் எங்கள் பாதுகாப்பிலேயே இருப்பார்கள்.

புலிகளினால் சிறை பிடிக்கப்பட்ட இரண்டு சிப்பாய்களின் உறவினர்களை தனித்தனியாகச் சந்தித்த கிட்டு இவ்வாறு தெரிவித்தார்.

நீங்கள் அரசை நிர்ப்பந்தியுங்கள், அரசு இராணுவ வீரர்களுக்கு மதிப்பு அளிப்பதாகத்தெரியவில்லை.

மதிப்பு அளித்திருந்தால் எமது நிபந்தனையை அரசு ஏற்றிருக்கும்.

எம்மிடம் கைதிகளாக உள்ள உங்கள் பிள்ளைகளை நீங்கள் எந்த நேரமும் வந்து பார்க்கலாம்.

உங்களுக்கு நாம் பாதுகாப்பு வழங்குவோம்.

இவ்வாறு கிட்டு அவர்களுக்கு ஆறுதல் கூறினார். (இ–5–10)

## சிங்கள மகா வித்தியாலயம் இருந்த இடத்தைப் பார்த்தனர்

யாழ்ப்பாணம், டிசம்பர் 8

விஜே குழுவினர் சனியன்று சுபாஸ் கபேயில் இருந்து புலிகளின் பழைய பூங்கா முகாமுக்குச் செல்லும் வழியில் சிங்கள மகாவித்தியாலயம் முன்னர் இருந்த இடத்தைப் பார்வையிட்டனர்.

கட்டடம் தகர்க்கப்பட்டதற்கான காரணத்தை உடனிருந்த எமது செய்தியாளரிடம் சிறிலங்கா மக்கள் கட்சி அனுராதபுர மாவட்ட அமைப்பாளர் வினவினார்.

அருகே இருந்த அடைக்கலமாதா தேவாலயத்தைக் காட்டிய எமது செய்தியாளர் அதற்கேற்பட்ட இராணுவ சேதங்களைப் பொறுக்காத மக்களால் மகா வித்தியாலயம் தகர்க்கப்பட்டது என்றார். (இ-5-10)

## சிப்பாய்களுடன் இரவு தங்கிய இருவர்

யாழ்ப்பாணம், டிச. 8

சிறை பிடிக்கப்பட்ட சிப்பாய்களான அஜித் சந்திரசிறியும், பண்டாரவும் வெள்ளி இரவை தென் இலங்கையில் இருந்து வந்த இருவருடன் கழித்தனர்.

அஜித் சந்திரசிறியின் உயிர்த் தோழன் நீல் ரஞ்சனும், பண்டாரவின் சித்தப்பா சுமித் சமரநாயக்காவும் தான் அந்த இருவரும்.

எங்களைப் புலிகள் நன்றாகக் கவனித்தார்கள். நல்ல சாப்பாடு கிடைத்தது. இரவு அணிவதற்கு இரண்டு புதிய சாரங்கள் தரப்பட்டன. காலையில் பல் துலக்க பற்பசை முதல் அனைத்து வசதிகளையும் அவர்கள் செய்து தந்தனர் என்று நீல் ரஞ்சனும் சுமித் சமரநாயக்காவும் தெரிவித்தனர்.

தமிழ்த் தெரியாத பண்டாரவும், அஜித்தும் இப்பொழுது தமிழில் கதைக்கவும் தொடங்கிவிட்டனர் என்றும் இவர்கள் இருவரும் மேலும் தெரிவித்தனர். (இ-5-10)

## பயிற்சிப் பாசறையை பார்த்து வியந்த பிக்கு

யாழ்ப்பாணம், டிச. 8

வவுனியாப் பகுதிப் பிக்கு சியம்பலகஸ்வெவ விமலசார தேரர் கச்சேரி பழைய பூங்காவில் புலிகளின் பயிற்சிப் பாசறையைப் பார்வையிட்ட போது அங்கு இருந்த இளம் புலிகளைக் கண்டு ஆச்சரியம் அடைந்தவராகக்காணப் பட்டார்.

அவர்களின் சுகத்தைக் கேட்டறிந்து கொண்ட அவர் அவ்விடத்தை விட்டு அகன்றார். (இ–5–10)

## தம்பி அஜித் வீட்டுக்கு வந்தே தீருவான்

### அக்கா சுமண கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிச 8

எனது தம்பி அஜித் எப்பொழுதோ ஒருநாள் வீடு வந்து சேர்வான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இப்படி கூறினார் அஜித் சந்திரசிறியின் சகோதரி சுமண.

சுமண மேலும் எமது செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா அரசு தனது வெகுஜன தொடர்பு சாதனங்கள் மூலம் பொய்ப் பிரசாரம் செய்கிறது.

உரிமைகளுக்காகப் போராடும் இளைஞர்களை பயங்கரவாதிகள் என்று அரசு பிரசாரம் செய்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் கொலை செய்யப்பட வேண்டும் என்று குரல் எழுப்பும் அமைப்புக்கள்

யாழ்ப்பாணம், டிச. 8

தெற்கிலே இனவாத அரசியல் வாதிகளினால் அமைக்கப்பட்ட பல அமைப்புகள் தமிழ் மக்கள் கொலைசெய்யப்பட வேண்டும் என குரல் எழுப்பி வருகின்றன. ஆனால் ஸ்ரீலங்கா மக்கள் கட்சி மட்டுமே வடக்கு–தெற்கு மக்களின் ஒற்றுமைக்காக போராடி வருகிறது.

பிக்குகள் – புலிகள் சந்திப்பின் போது ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவர் விஜய குமாரணதுங்கா இவ்வாறு தெரிவித்தார்

ஜே. ஆர்., தொண்டமான் இராசதுரை, தேவநாயகம் போன்றவர்கள் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறார்கள்.

இனப்பிரச்சினைக்கு முட்டுக்கட்டையாக இருப்பவர்கள் இந்த முதலாளி வர்க்க அரசியல் வாதிகளே.

இராணுவத்தில் சேர்ந்து போராடுபவர்கள் அனைவரும் தமிழ் மக்களுக்கு எதிரிகள் அல்லர்.

வறிய மக்கள் ஏழ்மையின் காரணமாக இராணுவத்தில் சேருகிறார்கள் என்றும் விஜே கூறினார். (இ–10–5)

## யாழ்ப்பாணத்தில் சுதந்திரக் காற்றை சுவாசிக்கிறோம்

### ஆனால் தெற்கில் அது இல்லை

யாழ்ப்பாணம், டிச 8

யாழ்ப்பாணத்தில் இன்று நாம் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கிறோம். ஆனால் அரசின் பாதுகாப்பில் உள்ள தென் இலங்கையில் எமக்கு பாதுகாப்பு இல்லை.

விஜயகுமாரணதுங்காவுடன் கூடவந்த அவரது கட்சியின் அனுராதபுர மாவட்ட அமைப்பாளரும் சட்டத்தரணியுமான திரு. ரி. சாந்த பிரேமரட்ன எமது செய்தியாளரிடம் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கே ஆயுதப் படையினரின் எந்தவிதக் கட்டுப்பாட்டுக்குள்ளும் சிக்காமல் மக்கள் சுதந்திரமாக வாழ்வதை நான் காண்கிறேன்.

எம்மைப் போல் இன்னும் பல சிங்கள மக்களும் வடக்கிற்கு வந்து நிலைமையைப் பார்க்க விரும்புகிறார்கள்.

சிங்கள மக்களை அரசு இனியும் வெறும் இனவாதத்தால் ஏமாற்ற முடியாது. அவர்கள் தமிழர்களின் அபிலாஷைகளை; போராட்டங்களைப் புரிந்து கொண்டுவிட்டனர்.

எமது வாழ்க்கையிலேயே மறக்க முடியாத ஒரு பயணமாக இது இருக்கும்,

இப்படி அவர் கூறினார். (இ-5-10)


### பொய்யாமொழி

குறள்:

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை.

பொருள்:

தன் உயிர் உடம்பில் இருந்து நீங்கிப் போவதாக நேர்ந்தாலும், சான்றோர்க்குத் தொலைவு வரும் ஆக்கம் மிக இழிவானதாகும்.



இன்று ஆரம்பமாகிறது

## பேரின்ப நிலையை அடைய வழிகாட்டும் திருவெம்பாவை

சைவ சித்தாந்தத்தின் படி ஆண்டவனை அடையும் மார்க்கம் நான்கு படிகளை உடையது. அவை முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாம். அவை தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என அழைக்கப்படும்.

இவற்றுள் நான்காவதான சன்மார்க்கம் நாயக, நாயகி நெறியாகும்.

அதாவது இறைவனைக் கணவனாகக் கொண்டு ஆன்மா நாயகியாக நின்று அன்பு செய்தலாகும். இதனை திருவாசகப் பாடல்கள் தெளிவுற உணர்த்துகின்றன.

இறைவனால் காதல் நெறிக்காகப் படைக்கப்பட்டது இவ்வுலகம்.

ஆதலின் கற்புக்காதலியுடன் காதன்மை பூண்டொழுகி உலகத் தொண்டு பேணிவர இறைவன் திருவருள் அறிவுறுத்த இக்காதலெல்லாம் திரண்டு ஓர் உருவாகி அவனைப்பற்றி அப்பற்றே பற்றுக, ஒழிந்த பிறபற்றெல்லாம் நீங்கி அவனே காதலனாகவும் தாம் காதலியாகவும் பேரின்பம் நுகர்ந்து வருவதே திருவாசகத்தின் பொருளாகும்.

திருவாசகத்தின் ஓரங்கமே திருவெம்பாவை. இது இறைவனை அடைய விழையும் ஆன்மாவின் நிலையை நன்குணர்த்தி நிற்பது. இது திருவண்ணாமலைத் திருத்தலத்தில் திருவாதவூரரால் திருவாய் மலர்ந்தருளப்பட்டது. 'அண்ணாமலையான் அடிக்கமலம்' என்பதும் 'மாலறியா நான்முகனும் காணாமலை' என்பதும் இதனைத் தெளிவுறுத்தும். பெண்பாலார்விளையாட்டாகச் செய்யும் வழிபாடு பேரின்ப நிலையை நாம

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Wyman English Language
INSTITUTE
ENGLISH ASSISTANT TEACHERS' EXAM
20, மீட்டல் வகுப்புகள்
ஆரம்பம்: 8 - 12 - 86
S. B. IYAR
நேரம்: 10 00—11.30 காலை
12, வைமன் வீதி, நல்லூர்.



# உதயன்

08 - 12 - 1986 திங்கட்கிழமை



Wyman English Language
INSTITUTE
'TOEFL' வகுப்புகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
திங்கள், வெள்ளி: காலை 11 30 – 1.30
சனி, ஞாயிறு: மாலை 1 30 – 2.30
S. B. IYAR
12, வைமன் வீதி, நல்லூர்.


6 மாத காலத்தில்

# யாழ்ப்பாணத்தில் வைத்தே ஜெய்ப்பூர் கால் பொருத்தலாம்

## ஆபத்திலுதவுவோர் சங்கத் தலைவி கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிச 8

கால் இழந்தோருக்கான ஜெய்ப்பூர் செயற்கைக் கால்களை இன்னும் 6 மாதங்களில் யாழ்ப்பாணத்தில் வைத்தே பொருத்தலாம்.

கொழும்பிலுள்ள ஆபத்திலுதவுவோர் சங்க (பிறன்ட் இன் நீட்ஸ்) தலைவி திருமதி சுவர்ண பேடினன்ற் இவ்வாறு கூறினார்.

யாழ் அன்னையர் முன்னணியின் உதவியுடன் யாழ் வந்திருந்த இவர் செய்தியாளர்களை நேற்றுச் சந்தித்தார்.

இச் சந்திப்பில்; சிங்களப் பெண்ணான இவரின் தமிழ்க் கணவர் திரு. பேடினன்ற்; யாழ் போதனா வைத்தியசாலை அதிகாரி டாக்டர் நச்சினார்க்கினியன்; அன்னையர் முன்னணித் தலைவி திருமதி தேம்பா குணநாயகம்; ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவர்களுடன் இரு கால்களையும் இழந்து ஜெய்ப்பூர் கால் பொருத்தப்பட்டு இன்று அவர்களது தொழிற்சாலையில் பணிபுரியும் தமிழ் இளைஞன் லோகநாதனும் உடன் இருந்தார்.

யாழ்ப்பாணத்தில் ஜெய்ப்பூர் கால் பொருத்தும் நிலையம் அமைக்க ஆரம்ப முதலாக 3 லட்சம் ரூபா தேவைப்படுகிறது.

இப்பணத்தை பொதுஸ்தாபனங்கள், நலன் விரும்பிகள் தந்துதவ வேண்டும் என திருமதி பேடினன்ற் கேட்டுக் கொண்டார்.

மாதகலைச் சேர்ந்த பிரேம்குமார் எனும் இளைஞனும் பாலசுப்பிரமணியம் எனும் இளைஞனும் இதில் தொழில் பயிற்சி பெறுவதற்காக கொழும்பு செல்லவுள்ளனர்.

இவர்கள் இருவரும் ஜெய்ப்பூர் கால் பொருத்தப்பட்டவர்கள்.

ஆரம்பத்தில் கால்கள் மட்டுமே இங்கே பொருத்தப்படும். பின்னர் படிப்படியாக ஜெயப்பூர் கால் தயாரிக்கும் வேலைகளும் இங்கே ஆரம்பிக்கப்படும் என அன்னையர் முன்னணித் தலைவி கூறினார்.

இதுவரை யாழ்ப்பாணத்தில் 250 பேர் ஜெயப்பூர் செயற்கைக் கால்கள் பொருத்துவதற்காக விண்ணப்பித்துள்ளனர்.

8 பேர் இதுவரை கால்களைப் பொருத்தியுள்ளனர். ஒரு ஜெய்ப்பூர் செயற்கைக் காலின் விலை 1000 ரூபாய்.

16 பேருக்கு கால்களை நமது பணத்தில் பெற்றுக் கொடுக்க யாழ் நலன் விரும்பிகள் சிலர் முன்வந்துள்ளனர் என டாக்டர் நச்சினார்க்கினியன் தெரிவித்தார். (இ-5

## விமானத்தில் மட்டக்களப்பு வந்தனர்

மட்டக்களப்பு, டிச. 8

கூட்டுப்படைத்தளபதி சிறில் ரணதுங்க மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. றிஸ்வி சின்னலெப்பை ஆகியோர் விசேட விமானத்தில் மட்டக்களப்பு வந்தனர்.

மட்டக்களப்பு விமான நிலையத்தில் இருந்து இரண்டு பேரும் ஹெலிக்கொப்டரில் காத்தான்குடி சென்று நிலைமையை நேரில் அவதானித்தனர் (இ-எ-21)

## வாங்கவும் / விற்கவும்

எப்பொருள்களானாலும் புதியனவைகளானாலும் – பழையவைகளானாலும் வாங்கவும்/ விற்கவும் தினமும் எம்மை நாடுங்கள். எங்களிடம் புதியனவும்– பழையனவுமாகிய நானாவித பொருள்கள் மலிவு விற்பனைக்கிருக்கின்றன. லக்கி பெனிபிட் கொம்பனி லிமிட்டட், பொதுச் சந்தை (சந்திக்கருகாமையில்), கோப்பாய்.

## பேரின்ப. -.

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

டைவதற்கு வழிகாட்டும்.

திருவாதிரை சிவனுடன் சம்பந்தமுடையது. சிவனுக்கு ஆதிரையான் என்ற பெயருமுள்ளது. சைவர்களுக்கு மிக விசேடமான தினங்களில் திருவாதிரையும் ஒன்றாகும். திருவாதிரைக்கு முதல் ஒன்பது நாட்களிலும் வீதிகள் தோறும் திருவெம்பாவை ஒலிப்பதைக் கேட்கலாம். பனிக் குளிரையும் பாராது பாலர்களும், சிறுவர்களும், சிறுமியரும், இளைஞரும், வளர்ந்தோரும் திருவெம்பாவைப் பாடல்களை தெருக்கள் தோறும் பாடிக்கொண்டு செல்வதைக் காணலாம். திருவெம்பாவைத் திருநாள் இன்று ஆரம்பமாகிறது.

இத்தினங்களில் மணிவாசகரின் மகிமையையும், திருவாசகத்தின் அருமையும் அறிந்து, சிவனடியைச் சிந்தித்து, மீட்டிங்கு வந்து வினைப் பிறவி சேரா, பேரின்பப் பெருநிலை அடைவோமாக.

பரமேஸ்வரி
சிவராமலிங்கம்

## பௌத்த குரு---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

போடப்பட்டுள்ளது

இப்படி விஜே கூறினார்.

இதேவேளை வவுனியாவில் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு விஜே பதில் அளித்தார்.

கேள்வி – பதில் வருமாறு:-

கேள்வி:- யாழ்ப்பாணத்தில் சிறை வைக்கப்பட்டுள்ள சிப்பாய்கள் பூஸா முகாமில் இருக்கும் இளைஞர்கள் போலவா நடத்தப்படுகிறார்கள்?

பதில்:-இல்லை! இல்லை: அது முற்றிலும் தவறு அவர்கள் நல்ல முறையில் புலிகளினால் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

கேள்வி:- இந்த இரண்டு சிப்பாய்களுக்காகவும் இவ்வளவு கஷ்டப்படும் நீங்கள் பூஸா. வெலிக்கடயில் உள்ள தமிழ் இளைஞர்களுக்காக ஏன் அரசுடன் வாதாடக் கூடாது?

பதில்:-- அவர்களுக்காகவும் நாம் குரல் கொடுக்க உள்ளோம்.

கேள்வி:- மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு எப்போது போவீர்கள்?

பதில்:- எனது பேச்சுவார்த்தை வெற்றி அளிக்கும் வரை சிப்பாய்களை விடுதலை செய்யும் வரை நான் யாழ்ப்பாணம் சென்று வருவேன்.

கேள்வி:- சிப்பாய்களை விடுதலை செய்ய இனி என்ன செய்யப் போகிறீர்கள்?

பதில்:–பௌத்த மதகுருமார் மூலம் ஜனாதிபதிக்கு இதனை தெரிவித்து அதற்கான நடவடிக்கையை மேற் கொள்ள இருக்கிறேன். (இ - 10)

## தம்பி---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

இதை நாங்களும் கூட ஓரளவு நம்பி இருந்தோம். ஆனால் இங்கு வந்த பிறகு— எனது சகோதரனை நேரில் சந்தித்தவுடன் ஸ்ரீலங்கா அரசின் பிரசாரம் முற்றிலும் பொய் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

எனது தம்பியை உயிருடன் இவ்வளவு காலமும் பராமரித்து வருவதில் இருந்து புலிகள் மனிதாபிமானம் மிக்கவர்கள் என்பது தெரிகிறது

என்றோ ஒரு நாள் தம்பி அஜித் எங்கள் வீடு வந்து சேர்வான்.

இப்படி சுமனா கூறினார். (இ-5-10)

## சடலங்களுடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்மீதும் விழுந்தது நான் இறந்தவர் போல் ஏனைய இறந்தவர்களின் சடலங்களுடன் கிடந்தேன்

பிற்பகல் 3–30 மணி அளவில் பொலீஸார் வந்தனர். அப்போது தான் நான் எழும்பி பொலீஸாருக்கு விஷயத்தைத் தெரிவித்து பாதுகாப்புக் கேட்டேன்

இப்படிச் சாட்சி சொன்னார்.

11 மரணங்களும் கொலைச் சம்பவங்கள் என்று மரணவிசாரணை அதிகாரி திரு. த. சிவநாதன் தீர்ப்பளித்தார்.

சடலங்கள் மீது அசிட் திராவகம் ஊற்றப்பட்டிருந்ததாகவும் வைத்திய பரிசோதனையில் தெரியவந்தது. (இ-எ-21)

## கிழக்கின் வரைபட..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுக்கு எடுத்துக் காட்டுவேன்.

மேற்கத்திய பத்திரிகையாளர்கள், சர்வதேச மன்னிப்புச் சபை அதிகாரிகள் இலங்கைமீது குற்றம் சுமத்துகிறார்கள்.

தமிழர்களை இலங்கை அரசு அடிமைகளாக நடத்துகிறது என்பதே இவர்களின் குற்றச் சாட்டு.

உலக அபிப்பிராயமும் இப்படித்தான் இருக்கின்றது.

217 பேர் காணாமற் போனது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

அதற்கான சத்தியக் கடதாசிகளைச் சர்வதேச மன்னிப்புச் சபை சமர்ப்பித்துள்ளது.

சத்தியக் கடதாசிகளை இலங்கையில் பெறுவது எவ்வளவு இலகுவான காரியம் என்பது எம் எல்லாருக்கும் தெரிந்த விஷயம்.

இந்த பணவீக்கமான காலத்திலே கூட 25ரூபாவைக் கொடுத்து சத்தியக் கடதாசி பெற்றுக் கொள்ளக்கூடிய நிலை இங்கு உள்ளது.

**படையினரின் அத்துமீறல்**

இலங்கையில் தற்சமயம் நிலவும் சூழ்நிலையில் அப்பாவிகள் உயிரிழப்பது தவிர்க்க முடியாத ஒரு விஷயமாகி விட்டது.

இலங்கை ஆயுதபடையினர் இன்று கூடிய கட்டுப்பாட்டுடன் இயங்குகின்றனர்.

குறைகளும் அத்துமீறல்களும் படையினர் மத்தியில் இல்லாமல் இல்லை.

உலகில் எல்லா நாடுகளில் உள்ள படைகளுக்கும் இது பொதுவானது ஒன்று.

மனித உரிமைகளுக்கு எமது அரசமைப்பு உத்தரவாதம் கொடுத்து உள்ளது என்று நான் அமெரிக்க மக்களுக்கு எடுத்துச் சொல்வேன்.

இலங்கை, தமிழ் மொழிக்கு அரசியல் சட்ட அந்தஸ்து கொடுத்துள்ளது.

இந்தியா கூட இப்படியான அந்தஸ்தைக் கொடுக்கவில்லை.

இப்படி திரு. லலித் அத்துலத் முதலி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இந்திய இணை அமைச்சர் குழு இம் மாதம் 17 இல் வர உள்ளது.

அதற்கு முன்னர் நான் கொழும்பு திரும்பி விடுவேன் என்றும் அமைச்சர் சொன்னார். (இ–எ)

## பதினொரு குடும்பங்கள் இடம் பெயர்வு

அம்பாறை, டிச. 8

சம்மாந்துறை பொலீஸ் நிலையத்துக்கு அருகில் வசித்து வந்த பதினொரு குடும்பங்கள் வேறு இடங்களில் குடியமர்த்தப்பட்டன

கடந்த மாதம் 19-ஆம் திகதி சம்மாந்துறை பொலீஸ் நிலையம் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து இவர்கள் அகற்றப்பட்டனர்.

இவர்கள் குடியிருக்க காணிகளை அம்பாறை அரச அதிபர் வழங்கி இருக்கிறார்.

வீடு கட்டுவதற்காக புனர்வாழ்வு அமைச்சு தலா ஆயிரம் ரூபா ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்கியது. அத்துடன் இரண்டு வாரங்களுக்கான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (இ–14)

## திருவெம்பாவை திருவிழா

வட்டுக்கோட்டை, டிச. 8

காரைநகர் சிவன்கோவில் ஈழத்துச் சிதம்பரம் திருவெம்பாவை, திருவாதிரை திருவிழா, ஆகியவை இன்று திங்கட் கிழமை ஆரம்பமாகின்றன.

தேர்த்திருவிழா 16–ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

இரவு நடேசர் அபிஷேகமும் காலை ஆருத்திரா தரிசனமும் இடம் பெறும். (இ–161)

## வேலணையில் மூளைக்காய்ச்சல்

வேலணை, டிச.8

தீவுப்பகுதியில் மூளைக் காய்ச்சல் நோய் பரவி வருகிறது

வேலணைப்பகுதியில் இருவர் இந்நோயால் பாதிக்கப்பட்டு மரணமடைந்துள்ளார்கள். (இ–167)

## புகார்களை ஏற்க மறுக்கும் பொலீஸ் நிலையங்கள்

மட்டக்களப்பு, டிச 8

மட்டக்களப்பு பகுதியிலுள்ள பொலீஸ் நிலையங்கள் சில ஆயுதபடை வீரர்களுக்கெதிரான புகார்களை ஏற்கமறுத்து வருவது குறித்து மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட பிரசைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி சாம்தம்பிமுத்து பொலீஸ் மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார். (இ–21)

## விஜே குழு---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பாகச் சென்றது.

சுபாஸ் விடுதியில் இருந்து விஜே குழுவினர் வெளியேற முன்னர் சுபாஸ் உரிமையாளர் திரு. சங்கரனுடனும், விடுதலைப் புலிகளுடனும் கைகுலுக்கி விடை பெற்றுக்கொண்டனர்

சிப்பாய்களின் உறவினர்கள் கவலை தோய்ந்த முகத்துடன் தமது பயணத்தை ஆரம்பிக்கக் காணக்கூடியதாக இருந்தது

சிப்பாய்களின் உறவினர்களான பெண்கள் சிலர் பிரிவை நினைத்து வாய்விட்டு அழுதனர்.

வீதி எங்கும் நின்ற மக்கள் கை அசைத்து விஜே குழுவினரை வழி அனுப்பி வைத்தனர்.

நண்பகல் இவர்கள் மதிய போசனத்தை வவுனியாவில் முடித்துவிட்டு கொழும்பு நோக்கிப் பயணத்தை ஆரம்பித்தனர். (இ–10)

## அரசு மீண்டும்---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ரால் கூறப்பட்டது என்றும் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

அதனை அடுத்து எழுந்துள்ள புதிய நிலை குறித்துப் பேச்சுக்கள் நடத்தவே இந்திய இணை அமைச்சர் குழு இம்மாதம் 17 திகதி கொழும்பு வர உள்ளது என்றும் அறியப்படுகிறது. (அ-எ)

## ஆறேழு---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வலகத்தினுள் ஓடிப் போய் ஒளித்துக் கொண்டேன்.

இப்படி சாட்சி சொன்னார்.

மரணவிசாரணை அதிகாரி திரு த. சிவநாதன் கொலைகள் என்று தீர்ப்பளித்தார். (இ-எ–21)

## கட்டப்பராய்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் எமது மாணவர்களை, அவர்களில் சிலர் தாக்கினார்கள்.

இந்தச் சம்பவத்தைப் படம் பிடிப்பதற்காக இயக்கம் ஒன்று அங்கு வந்தது அதனைத் தொடர்ந்து பிரஸ்தாப இயக்கக் காரருக்கும் பாதயாத்திரையை வழிமறித்தவர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட இயக்கத்தினர் வானத்தை நோக்கிச் சுட்டனர்.

இதனை அறிந்து மற்றோர் இயக்கம் கட்டப்பராய்க் குளத்தடிக்கு வந்து சேர்ந்தது. அந்த இடத்தில் இயக்க மோதல் எதுவும் ஏற்படக் கூடாது என்ற நோக்கத்துடன் இருசாராரையும் செல்லுமாறு கேட்டுக்கொண்டோம்.

அவர்கள் சென்றதன் பின்னர் பாதயாத்திரையைத் தொடர முடியாத நிலையில் பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க பல்கலைக்கழகம் வந்து சேர்ந்தோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருந்தது. (இ-10)

## உபநயன சுபமுகூர்த்தப் பத்திரிகை

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் அக்ஷய வருஷம் கார்த்திகை மாதம் 24-ந் திகதி (10-12-86) புதன்கிழமை தசமித்திதியும், சித்தயோகமும், உத்தரட்டாதி நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் காலை 10-45 மணிக்குமேல் 12 மணிக்குள்வரும் கும்பலக்கின சுபஹோரையில்,

✶ சிரஞ்சீவி கு. குருசாமிசர்மாவுக்கு ✶
(காலஞ்சென்ற குமாரசாமிக்குருக்கள் அவர்களின் ஏகபுத்திரன் கைலாசபிள்ளையார் தேவஸ்தானம்)

சௌள உபநயன பிரம்மோபதேசம் செய்ய ஸ்ரீ கைலாசபிள்ளையாரின் அனுக்கிரகத்துடனும், ஸ்ரீ காஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களின் அனுக்கிரக ஆசியுடனும் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, ஷை முகூர்த்தம் நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளையார் ஸந்நிதியில் நடப்பதால் தாங்கள் தங்கள் இஷ்டமித்திரபந்துக்களுடன் வந்திருந்து நடாத்திவைத்து குழந்தையை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

சுபம்

கைலாசபிள்ளையார் தேவஸ்தானம்,
நல்லூர் - யாழ்ப்பாணம்.

இங்ஙனம்,
கு. மணிக்குருக்கள்
கு. கோபாலசர்மா

## நீத்தார் பட்டியல்

### திருமதி. மனோன்மணி - சரவணமுத்து (அத்தை)

திருநெல்வேலியைச் சேர்ந்த திருமதி ச. மனோன்மணி (07–12–86)-ல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. சரவணமுத்து (மலாயன் பென்சனியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு. விஸ்வரெத்தினத்தின் அன்புச் சகோதரியும், கோண்டாவிலைச் சேர்ந்த தில்லையம்பலம் பொன்னம்மாவின் அன்பு மைத்துனியும் விஜசித்தம்பி மங்கையர்க்கரசி, சோமசுந்தரம் யோகேஸ்வரி, தில்லையம்பலம் தவரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாரும் சரோஜினிதேவி, சிவலோகநாதன் (உரிமையாளர்: ஆர்த்தி ஜுவலர்ஸ், யாழ்ப்பாணம்), சாந்தாதேவி, காலஞ்சென்ற வசந்தாதேவி, சந்திராதேவி சூரியகுமாரி, நிர்மலாஜினி ஆகியோரின் அன்பு அத்தையும், திரு. தெட்சணாமூர்த்தி, காலஞ்சென்ற திரு. பரராஜசிங்கம் திரு. குலசிங்கம், திரு. சோமபாலன், திரு. சிவனேசன் ஆகியோரின் அன்புச் சிறியதாயாரும், மயூதரன், நிவுங்கா, கிரிதரன், ஆர்த்தி, ருக்மாங்கன், ரஜீவ், வர்ணன், சர்மிதா, ஆகியோரின் அன்பு அத்தைப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மாரியம்மன் வீதியில் உள்ள இல்லத்தில் (08-12-86 திங்கட்கிழமை காலை 9-30 மணியளவில்) நடைபெற்று தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றேன்.

தகவல்: வி. சிவலோகநாதன்
மாரியம்மன் லேன், திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

### சின்னத்தம்பி தம்பிராசா

புங்குடுதீவு 6-ம் வட்டாரம் இறுப்பிட்டியைச் சேர்ந்தவரும் 306/1 நாவலர் வீதியில் வசிப்பவருமான திரு. சி. தம்பிராசா காலமானார். இவர் முன்னாள் பதுளை ஆர். வைத்திலிங்கம்ஸ் லிமிட்டெட்டின் முகாமையாளரும் வெங்கடேஸ்வராவின் உரிமையாளரும், தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னத்தம்பி – தெய்வானைப்பிள்ளையின் மகனும் காலஞ் சென்ற சதாசிவத்தின் மருமகனும் துரைச்சாமி (துரை சன்ஸ் கொழும்பு), செல்லம்மா, நாகம்மா (ஆசிரியை) ஆகியோரின் சகோதரரும், ஜெயசீலன் (வர்த்தகர் கொழும்பு). ஜெயராணி, கமலாசனி(குவைத்) புஷ்பஞானி (அவுஸ்திரேலியா) சத்தியசீலன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், அரியமலர், சடாட்சர சண்முகதாஸ் (உதவி அரசாங்க அதிபர் தலைமைப் பீடம், கச்சேரி, மட்டக்களப்பு) சிவபாதசுந்தரம் (பொறியியலாளர் குவைத்) சந்திர பாலன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும், திருநாவுக்கரசு (வர்த்தகர் பதுளை) மாணிக்கம் (ஆசிரியர்) காலஞ்சென்ற சிவரத்தினம் (ஹோம் நீட்ஸ் பதுளை) மகாலிங்கம் தனபாலசிங்கம் (வர்த்தகர் கொழும்பு) யோகம்மா, சண்முகலிங்கம், இராமச்சந்திரன் (ஹோம் நீட்ஸ, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும் முத்துலிங்கத்தின் (விலைக்கட்டுப்பாட்டதிகாரி கொழும்பு) சகலனுமாவார்,

ஈமக்கிரியைகள் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு அன்னாரின் நாவலர் வீதி இல்லத்தில் நடைபெற்று கோம்பையன்மணல் மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

தகவல்: த. ஜெயசீலன்

### திரு. T. S. யோசப்

(முன்னாள் O. A கச்சேரி, மன்னார்)

எமில் நகர் மன்னார் திரு, T.S. யோசேப் (முன்னாள் O.A கச்சேரி. மன்னார்) காலமாகி விட்டார். இவர் ஜெயமணியின் அன்புக் கணவரும், ஜெயபாலன் (அரசினர் வைத்திய சாலை, நம்புக்கனை), ஜெயமாலதி (ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, கோப்பாய்) செல்வபால (சவுதி அரேபியா),றம்பால் (இலங்கை வங்கி, மன்னார்), குமுதினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயந்திமாலாவின் மாமனாரும், ஜெயப்பிரதாவின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 8–12–86 பிற்பகல் 3–30 மணிக்கு எமில் நகர் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: கனகரத்தினம்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 08-12-1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 11, Second Lane, Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ 60 N 86. T'PhoneNo. 24805, 22073.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org